ஸ்ரீ

ஸ்ரீ [illegible]

வடிவழகிய நம்பிதாஸர்

இயற்றிய

# ஆழ்வார்கள் வைபவம்

20764

இது

ஸ்ரீரங்கத்திலிருக்கும்

வக்கீல். ஸ்ரீ. உ. J. கிருஷ்ணையங்கார் ஸ்வாமி

நியமனப்படி

பண்டிதர் P. R. கிருஷ்ணமாசாரியரால்

பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்பாசிரியர்

PRINTED AT
THE WEDNESDAY REVIEW PRESS
TRICHINOPOLY
1909.

(Copy Right

ஸ்ரீ

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

பிறவிபல பிறந்திடவும் பிணங்கியவ ரேடுயிர்க
ளுறவின்றிப் பகையாகி யரக்கர்களா யுயிர்மாய
வறமெலிந்து சோதிசில ரகப்பட்டா தம்மொடும்போய்த்
துறவுசெறி யந்தாமம் புகுந்திருந்தோர் சூட்சியினால்.

மான்காட்டி மான்பிடிக்கு மதியினர்போல் வரியளிசேர்
தேன்காட்டுந் துழாயினான் சீவைகுந்த முததாகளுக
கூன்காட்டா னூன்காட்டி யுலகமுய்யும் பொருட்டாக
வான்காட்டு மயர்வில்லா மதிநலமு மகிழ்ந்தருளி.

வாழ்விப்பான் யோனியராய் முதலாழ்வார் கலைமணற்
றாழ்வில்லா வற்பசியோ ணம்மவிட்டஞ் சதையத்திற்
சூழ்புரிசைக் கச்சிமல்லை மயிலையென்னுந் தொன்னகரி
னூழில்பொய்கை பூதம்பே யெனுநாமத் துதிப்பித்தான்.

வேறு.

ஏம வுலகி லிடர்நீங்க வெவ்வுயிர்க்குங்
காமக் குரோதாதி கால்குலையச் செந்திருவின்
நாமம் விளங்க நறையார் பசுந்துளவத்
தாம முடியான் றமராய மூவர்களும்.

வேறு.

ஒருவரை யொருவர் காணா துரைத்தவப் பதிக டோறுந்
திருவளர் மார்ப னன்றிச் செகத்திலோர் துணைகா ணாதே
வருபகல் பல்வும் வைகி வளருநா ளொருநாண் மாயக்
கருநெறி கடக்கின் றூரைக் காசினி யெங்கு நாடி.

திரிந்துநாங் காணடல் வேண்டு மெனத்திரு வுளத்தி லெண்ணிப்
பரிந்தெழு சிந்தைப் பொய்கை பழனஞ்சூழ் கச்சி நீங்கி
விரிந்தெழு கருணை பொங்க விடைகொள்வார் கோவ லூரிற்
புரிந்தவண புடைய மாய னருளினா லதனுட் புக்கார்.

புக்கவர் கமலக் கண்ணன் பூங்கழ லிணைந்து வாழ்த்தி
பக்கர மெட்டு முள்ள படியினா லமைய வோதி
மூக்கணன் சாபந் தீர்த்த முதல்வனென் றன்பு செய்து
மக்கவப் பதியி லன்று தங்குவான் சமைந்த போதில்.

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

பூசுபூ மல்லை யென்னும் பொன்னகர் தன்னு ணின்
வேதநா யகற்கா ளாய மெய்யரை யெங்கு நாடிப்
பாததா மரைக ளேத்திப் பரவுவான் பரிந்த வன்பாற்
போதுவார் கோவ லூரிற் பூவைப்பூ வண்ண ருய.

அருமறை முதல்வன் கூட்டு மருளினு லதனுட் சென்று
கருமுகில் வண்ணன் செம்பொற் கழலினைந் தன்றவ் வூரின்
மருவிட வந்த நாளிற் பேயரு மயிலை நீங்கித்
திருவருட் செயலால் வந்து திருக்கோவ லூரைச் சேர்ந்தார்.

பொருந்திய மூவர் தாமும் புனிதனை நினைந்து வெவ்வே
றிருந்தன ரிரவி பட்டா னிராப்பொழு தடங்கி வைகத்
திருந்திய பொய்கை சென்றோர் வேதியன் மனையிற் சேர்ந்து
நெருங்கிடை கழியின் மன்னித் துயில்கொள்வா னினைந்து சார்

வேறு.

பொருவினுறிப் பூதத்தார் புகுந்திதனு ளுறைபவரார்
தருமினிராத் தங்குமிட மெனப்பொய்கை தான்விழித்திங்
கொருவருக்கே கண்டுயில வுள்ளதிட நீரணைந்தா
லிருவருக்கு மிருந்திடலா மெனத்திறந்தார் திருக்கதவை.

முன்சென்றோர் பின்சென்றோர் முகங்காணு ரிருளின்கண
பொன்சென்ற விடைகழியி லிருவர்களும் புகுந்திருப்ப
மின்சென்ற சுடராழி விண்டுவருள் கொண்டுவரப்
பின்சென்ற பேயாரு மம்மனைவா யிற்புறமாய்.

சென்றோரிவ் விடைகழியிற் செறிபவரா ரிடமுளதோ
குன்றாத வன்புடையீர் கூறியிடு மெனவுரைப்ப
நன்றாய்முன் னொருவர்படுத் தோமிருவர் நன்கிருந்தோ
நின்றீர்நீர் வந்தணைந்தா னின்றிடலா மூவர்களும்.

எனவுரைப்பத் திறவுமென்றா ரிருந்தவர்தா டிறந்துநின்றார்
மனமகிழ்ந்து சென்றவரு மற்றவர்க ளுடனின்று
ரனவயல்சூழ் கோவலூ ராயனு மாயவனும்
புனமலர்ச்செந் திருவோடும் புகுந்திருளி லாங்கவரை

நெருக்கினு னொருக்குண்டு நின்றாழ்வார் மூவர்களு
முருக்காட்டா திவணொருக்கி யுறைபவரைக் காண்டுமெனுங்
கருத்தினுற் சுடர்ஞானக் கனல்விளக்கை யேற்றினேர்
திருக்கண்டேம் பொன்மேனி கண்டேமென் றுடன்றெளிந்தே.

பூடினர் குணலைக்கூத் தங்கைகொட்டி நான்மறையைப்
பாடினர் பாரோடும் பணிந்தெழுந்து பதுமத்தாள்
சூடினர் சுகவடிவைப் பிரிந்துதுன்ப மனைத்தீரக்
கூடினர் ஞானக் கொழுஞ்சோதிக் கடற்குளித்தார்

# முதலாழ்வார்கள் பிரபந்தம்.

அத்திக்கா யுட்கீட மத்திநடு வாதியந்த
மெத்திக்கா லும்மறியா வகைபோனின் னிடையிலன்
றொத்திப்பா ழுறவைதனுட் பிரமனா னெனத்தோன்றி
வத்தித்தா ருனையறியா ரென்றாலிம் மண்ணுலகில்.

பேரானந் தச்சோதிப் பிரளயமா நினையடையு
மூராத காதலரா யகப்படுவார் தமைக்காணேன்
நாராயணசெய்யுந் திறமறியே னவில்கவெனக்
கூராழி சங்கேந்துங் கொண்டலுடன் குறித்துரைத்தா

மூவர்களு மவைகூற மூவுலகு முண்டுமிழ்ந்த
தேவர்கடே வன்னகைத்துச் செப்புவா னீர்வேட்டா
ரேவர்கடா மடைத்துடைத்தா லூடுவா ரிரும்புனலோ
டாவபின்னு மடைப்பதல்லா லருள்கவென வாழ்வார்க

செங்கமலை தனிவாழ்வின் சேவடியி னுறப்பணிய
வங்கமுற மூவரையு மெடுத்தணைத்தீ தருள்புரியு
முங்கள்பொருட் டாலுலகந் திருந்தவின்ப முண்பதிய
பங்கமிலா நெறியுடையீர் பார்முழுந் திருத்துமென.

எம்பெருமா னின்றனனுங் கிணையில்பெருங் கருணை
மன்பர்களா மூவர்களு மச்சுதன்சீ ரருளேக்கி
யின்பமய மேயென்றிரங்கிக் கரைந்தழுதவ
கும்பர்முதன் மாநிலத்தோ ருய்யும்வண்ண மின்னிசை

வேறு.

வையந் தகளியென்றும் வார்கடலே நெய்யென்றும்
வெய்யகதி ரோனை விளக்கேற்றி னேனெனவுங்
கையம் புதத்தான் கழற்கேறு மந்தாதி
பொய்கைப் பிரான்கவிஞர் போரேறு கட்டுரைத்தான்

அன்பே தகளியென்று மார்வமே நெய்யென்று
மின்புருகு சிந்தை யிடுதிரி யாமென்று
மின்பொருவு மாழி விமலன் கழற்குலகிற்
புன்பிறவி நீங்கவிளக் கேற்றினார் பூதத்தார்.

வேறு.

திருக்கண்டே னென்றுபேய் செப்பியசீர்ச் சொற்றொடை
விருக்கின்முடி வார்ஞனை யேத்தினர்சீர்ச் சொன்மாலை
பெருக்குநெறி மூவருஞ்செய் பேருருண்மூ வந்தாதி
கருக்கடலை யுயிர்கடக்குங் கப்பலெனும் படிகழ்றி.

வாழ்வித்தா ருலகனைத்து மாமாயப் பெரும்பிணியை
யாழ்வித்தார் முதன்மூவ ரெனத்தோன்று மாழ்வார்கள்
வீழ்வித்தார் திங்கடொறு மும்மாரி மெய்ஞ்ஞானஞ்
சூழ்வித்தா ரனைவரையு மரிநாமஞ் சொல்வைத்தார்.